ஏப்ரல் 2025
மலர் 23, இதழ் 7

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# மரித்தோரை உயிர்ப்பித்த இயேசு கிறிஸ்து



# மரித்தோரை உயிர்ப்பித்த இயேசு கிறிஸ்து

வேதாகமத்திலே மொத்தம் அறுபத்தாறு புத்தகங்கள் இருந்தாலும் புதிய ஏற்பாட்டில் தான் தேவனுடைய ஒரே பேரானக் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் காணும்வாய்ப்பு, பேசும் வாய்ப்பு, உரையாடும் வாய்ப்பு, சுகத்தைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்தது. எப்பிராத்தாவில் பாலகனாக, தாழ்மையின் கோலமாய் முன்னணையில் கிடத்தப்பட்ட கிறிஸ்துவை முதன் முதலில் காணும் வாய்ப்பு எளிமையான மேய்ப்பர்களுக்குக் கிடைத்தது. பிள்ளைகள் எப்படி பெற்றோருக்கு கீழ்ப்படிந்து, உதவி செய்து வாழ வேண்டும் என்று தம்முடைய வாழ்விலே வாழ்ந்து காட்டியதால் இயேசுவானவர், ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தி அடைந்தார். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, பெற்றோரை கனப்படுத்தி வாழும் பிள்ளைகளுக்கு நம் ஆண்டவர் ஞானத்தினால் முடிசூட்டி, பூலோகம் மற்றும் பரலோகத்திற்குரிய ஆசீர்வாதத்தால் கிருபை அளிப்பார்.

புதிய ஏற்பாட்டில் இருபத்தேழு புத்தகங்களிலே முதல் நான்கு புத்தகங்கள் சுவிசேஷப் புத்தகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த சுவிசேஷ நூல்களில் தான், அநேகர் இயேசு கிறிஸ்துவை நேரில் காணும் வாய்ப்பைப் பெற்றார்கள். காண்பதோடு நின்றுவிடாமல், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே ஆச்சரியப்படும் விதத்தில் புறஜாதியார்களுடைய விசுவாசத்தை நம்மால் காணமுடிகிறது. புறஜாதியார்கள் ஆண்டவராகிய இயேசுவானவர் தங்கள் ஊர் வழியாக வருவதாகக் கேள்விப்பட்டவுடனே, சிறிது நேரம் கூட தாமதம் செய்யாமல் உடனே அவரைச் சந்திக்க ஆயத்தமாயிருந்தார்கள், புறப்பட்டார்கள். தங்களுடைய கஷ்டங்கள், சுகவீனங்களுக்கு ஒரு தீர்வான மருந்து இயேசு கிறிஸ்துவை சந்திப்பதே என்று உள்ளத்திலே ஆழமாக விசுவாசித்தார்கள். அநேக அற்புத அடையாளங்களைக் கண்டார்கள்.

உலக வரலாற்றிலே அநேக விஞ்ஞானிகள் தங்களின் புதிய கண்டுபிடிப்புகளின் மூலமாக தங்கள் பெயர்களை பதிவு செய்திருக்கிறார்கள். பெரிய பெரிய ஜனாதிபதிகள், முதல்வர்கள், பிரதமர்கள் இந்த உலகத்தை விட்டுக் கடந்து சென்றாலும், அவர்களது வாழ்க்கை வரலாறானது மக்கள் படித்து உலக அரசியலில் பொருளாதார நெருக்கடி, யுத்தம், கலகம், பிரச்சனைகள் தலைவிரித்தாடும் போது, சாதுர்யமாக எப்படி செயல்பட வேண்டும் என்று அறிந்து, தெரிந்து கொள்ளுகிறார்கள். இவையெல்லாம் உலக சம்பந்தமானக் காரியங்களுக்காக மனிதன் படும்பாடுகளே. இவையெல்லாம் காலம் செல்லச் செல்ல அழிந்து விடும். ஆனால் வேதாகமத்தில் / மறை நூலாகிய ஒருவன் / ஒருத்தி பெயர் முத்திரை பதிக்கப்படுகிறதென்றால் அதற்கு பெரிய பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

கிறிஸ்துவானவர் நான்கு சுவிசேஷ புத்தகங்களிலும் அநேக அற்புதங்களையும், அதிசயங்களையும் மக்கள் மத்தியில் செய்திருந்தாலும், எல்லாவற்றையும் எழுத வேதாகமம் போதாது. ஆகவே, பாக்கியம் பெற்ற நபர்களும் கிறிஸ்துவை நேரில் கண்டு அற்புத சுகத்தைப் பெற்றுக் கொண்ட இடம், சாட்சி, பேசிக் கொண்ட விதம் ஆகியவற்றைக் குறித்து இந்தத் தலைப்பில் காண்போம். மேலும் **"...இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்" (யோவான் 20:30).**

## *I. கிறிஸ்து செய்த அற்புதம் :*

**1. யோவான் 2 : 1–11**

இயேசுவானவர் தன்னுடைய ஊழியப் பாதையிலே **முதலில் செய்த அற்புதம்** கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே தண்ணீரை திராட்ச ரசமாக்கினது.

**2. யோவான் 4 : 46–54**

இயேசுவானவர் திரும்பவும் கானா ஊருக்கு வந்தபோது, கப்பர் நகூமிலே ஒருவருடைய மகனுக்கு அற்புத சுகம் கொடுத்தார். இது இயேசு செய்த **இரண்டாம் அற்புதம்.**

**3. லூக்கா 7 : 11–16**

நாயீன் ஊர் விதவையின் மகனை உயிரோடு எழுப்பினார்.

**4. யோவான் 11–ஆம் அதிகாரம்**

மரித்த லாசருவை உயிரோடு எழுப்பியது.

**மாற்கு 5 : 41–43**

மரித்த சிறு பெண்ணை உயிரோடு எழுப்பியது (தலித்தாகூமி).

**5. மாற்கு 6 : 38–47, யோவான் 6 : 1–13**

5 அப்பம் 2 மீன்களை ஆசீர்வதித்து 5000 பேருக்குக் கொடுத்தார்.

**6. மாற்கு 8 : 5–9**

7 அப்பம் சிலசிறுமீன்களை ஆசீர்வதித்து 4000 பேருக்கு கொடுத்தார்.

**7. லூக்கா 2 : 1–14**

இயேசுவின் பிறப்பு ஒரு அதிசயம், உயிர்த்தெழுதல் ஒரு அதிசயம். இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களிலே மூன்று அற்புதங்களைக் குறித்து விரிவாகக் காண்போம்.

### *1. குறைவை நிறைவாகக் கண்ட திருமணம்*

**''...தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன் என்று இயேசு கிறிஸ்து கூறினார்". (மத். 19 : 6, மாற்கு 10 : 9).**

முதல் திருமணமானது தேவன் தம்முடைய வீட்டில் ஏதேன் தோட்டத்தில் ஆதாம், ஏவாளுக்கு நடத்தினார். நல்ல நறுமணம் உள்ள பூக்கள் அமைந்த இடத்தில் தேவன் நடத்தி வைத்தார். ஆகவே, ஆண்டவருடைய பிள்ளைகள் எல்லோருடைய திருமணத்திற்கும் கர்த்தர் கலந்து கொள்ளப் பிரியப்படுகிறார்.

**இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கல்யாணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள் (யோ. 2 : 2).**

திருமணத்திற்கு முதல் விருந்தினராக நாம் இயேசுவாகிய நம் ஆண்டவரை அழைப்போமாக. அப்படி அழைக்கும்போது, நம் வீட்டுத் திருமணச் செலவையெல்லாம் நம் ஆண்டவர் சந்தித்துக் கொள்வார். வழியைக் காட்டுவார்; திருமணம், எந்தவிதக் குறைபாடுமில்லாமல் நடக்கும்.

கானாவூரில் நடந்த திருமணத்தில் ஒரு குறைபாடு விழுந்ததாக வேதத்தில் பார்க்கிறோம். பிதாவின் ஒரே பேரானக் குமாரன் பிறப்பதற்கு சத்திரத்தில் இடமில்லாமல் போனதுபோல் ஒரு குறைபாடு தோன்றியது. ஆனால், தன்னுடைய பாலகன் பிறக்க வேண்டியது முன்னணையில்தான் என்று தேவன் ஏற்கனவே திட்டம் போட்டு வைத்து விட்டார். யாருக்கும் தெரியாமல் இருந்த பெத்லகேமை உலகமே திரும்பிப் பார்க்க வைத்தது பாலகனின் பிறப்பு.

திருமண சாப்பாட்டில் யூதர்களின் அதிமுக்கியமானது திராட்சைரசம். பொதுவாக திருமணத்திற்குச் செல்பவர்கள், “பந்திக்கு முந்து, படைக்குப் பிந்து” என்ற பழமொழிக்கேற்ப பந்திக்கு முதலாவதாக அமர்ந்து விடுவார்கள். இங்கே ஏற்கனவே திராட்சைரசமானது, வந்திருந்த விருந்தினர்களுக்குப் பரிமாறப்பட்டு விட்டது. இன்னும் சாப்பிடாதவர்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. திருமண சாப்பாட்டில் அப்படியொரு குறை ஏற்பட்டபோது, இயேசுவின் தாயான மரியாள் ஆண்டவரிடம் சொல்கிறாள். அதற்குக் காரணம் மரியாளுக்கு மட்டுமே தெரியும் கிறிஸ்துவானவர் பரிசுத்த ஆவியினால் பிறந்த தேவனுடைய ஒரே பேரானக் குமாரன் என்பது. சர்வ சிருஷ்டிக்கும் எஜமானர், சர்வ சிருஷ்டியையும் காப்பவர். அவர் கட்டளையிட எல்லாம் நிறைவாகும். ஒருவேளை மரியாளின் உறவினர் வீட்டுக் கல்யாணமாயிருந்திருக்கலாம். இருவீட்டார் உறவினர்களுக்கிடையே பிரச்சனை வந்துவிடக்கூடாதே என்று யோசித்து மரியாள் என்ன கூறினாள்?

“அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதன்படிச் செய்யுங்கள் என்றாள்.”

திருமணத்தில் குறைபாட்டைக் கொண்டு வந்தது தேவனின் திட்டம். **கிறிஸ்துவின் மகிமை வெளிப்படுவதற்காக இந்த சம்பவம் நடந்தது.**

## *கிறிஸ்துவானவர் செய்த காரியம் என்ன?*

சுத்திகரிப்புக்காக வைக்கப்பட்டிருந்த ஆறு கற்சாடிகளை இயேசுவானவர் காண்கிறார். அந்த ஜாடிகளில் தண்ணீரை நிரப்புமாறு வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட்டார். தண்ணீர் ஆறு ஜாடிகளிலும் நிரப்பப்பட்டது. கிறிஸ்துவானவர் வேலைக்காரர்களைப் பார்த்து, இப்போது, (தம்முடைய மகிமையினால் திராட்சரசமான தண்ணீர்) பந்தி விசாரிப்புக்காரனிடம் கொண்டு போங்கள் என்றார். ருசி பார்த்த பந்தி விசாரிப்புக் காரனுக்கு ஒரே ஆச்சரியம். எப்படி இவ்வளவு ருசியான திராட்சரசம் வந்தது என்று யாரிடமும் கேட்கவில்லை. ஆனால், இவ்வளவு ருசியான திராட்சரசம் எப்படி வந்தது என்று தண்ணீரை ஜாடியில் ஊற்றச் சொன்ன தெய்வ மகனால் தான் வந்தது என்ற ரகசியம் தண்ணீரை ஊற்றி, ஜாடிகளில் நிரப்பின வேலைக்காரர்களுக்கு மட்டுமே தெரிந்தது.

திராட்சரசமானது ஒரு நிமிடத்தில் செய்ய முடியாது, ரசத்திற்குரிய பழங்களைத் தனியாகப் பிரித்து, அதை கசக்கி, ரசம் எடுத்துப் பதப்படுத்தி, இன்னும் எத்தனையோ நிலைகளைக் கடந்துதான் திராட்சரசம் கிடைக்கும். உடனே அவைகள் கெட்டுப் போய் விடாமல் இருக்க துருத்திகளில் அடைத்து, அதன்பின் விநியோகிப்பார்கள். இத்தனை நிலைகளைக் கடந்து கிடைக்க வேண்டிய திராட்சரசம், ஒரு நொடிப் பொழுதிலே கிறிஸ்துவின் மகிமையினால் கிடைத்தது.

ஒருவேளை இயேசு கிறிஸ்துவானவர் திருமணத்திற்கு வராதிருந்தால் திராட்சரசக் குறைபாடானது எப்படி நிவர்த்தி செய்யப்பட்டிருக்கும்? கர்த்தர் தூரத்திற்கும் தேவன். சமீபத்திற்கும் தேவன். இப்படியொரு குறைபாட்டை மரியாள் யார் மூலமாவது கிறிஸ்துவுக்கு தெரியப்படுத்தியிருந்தால் தூரத்திலிருந்தே தம்முடைய மகிமையை வெளிப்படுத்தி இருப்பார். ஆனால், எப்படி தண்ணீர் ரசமாக மாறியது என்ற மகிமை ஒருவருக்கும் தெரியாமல் போயிருக்கும்.

நம் ஆண்டவரை நம் வீட்டுத் திருமணத்திற்கு முதல் நபராக, மூத்த நபராக நினைத்து அழைப்போம். திருமணத்திலே எந்தக் குறைவும் இல்லாமல் இல்லறம் நல்லறமாக நீடுழிகாலம் வாழ

கர்த்தர் நம் பிள்ளைகளை ஆசீர்வதிப்பார். எந்த ஒரு குறைவும் இல்லாமல், எல்லாம் நிறைவாக இருக்க இடைபடுவார் என்பதில் சந்தேகமே இல்லை.

## *II. விதவையின் மகனை எழுப்பினார்*

**பார்த்தார், மனதுருகினார், அழாதே என்றார், பாடையைத் தொட்டார், ஒப்புவித்தார் (லூக். 7 : 11–16).**

நம் ஆண்டவராகிய கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் உயிரோடு எழுப்பிய மூவரில் – இரண்டு பேரின் உயிர்த்தெழுதல் லூக்காவில் எழுதப்பட்டுள்ளது. (லூக். 7 : 11-17, 8 : 49-56) மூன்றாவது உயிர்த்தெழுதல், நான்காவது சுவிசேஷமான (யோவான் 11 : 39-44) யோவானில் லாசருவைப் பற்றி வருகிறது. லூக்காவில் யவீருவின் மகள் மற்றும் வாலிபனைப் பற்றிக் காண்கிறோம். மரித்த மூன்று பேருமே வாலிபப் பிள்ளைகள். ஜெப ஆலயத்தலைவனுக்கு இருந்த ஒரே மகள். மார்த்தாள், மரியாளுக்கிருந்த சகோதரன் லாசரு, விதவைக்கிருந்த ஒரே மகன். மூன்று குடும்பத்தாருக்கும் அன்பாயிருந்த, ஆதரவாயிருந்த வாலிபப் பிள்ளைகள் மரித்துப் போயினர்.

நாயீன் என்னும் ஊருக்கு வந்த போது, அங்கு ஒரு வாலிபனைப் பாடையில் வைத்து தூக்கிக் கொண்டுச் செல்ல, பின்னாலே ஊர்மக்கள் அந்த விதவைத் தாய்க்கு ஆதரவாக வந்து கொண்டிருந்தார்கள். இந்தக் காட்சியை இயேசுவும் அவருடைய சீஷர்களும் காண்கிறார்கள். இறந்துபோன மகனைத் தவிர வேறு ஆதரவும் இல்லாத விதவையை தேவாதி தேவன் பார்த்தார், மனதுருகினார், அழாதே என்றார்.

இறந்து போன வாலிபனை உயிரோடு எழுப்பும்படி யாரும் இயேசுவிடம் கேட்கவில்லை. இயேசு தாமாகவே அந்த விதவையின் மேல் மனதுருகி, அழாதே என்று கூறி, பாடையைத் தொட்டு, வாலிபனே எழுந்திரு என்றார். மரித்த வாலிபன் எழுந்து, உட்கார்ந்து, பேசத் தொடங்கினான். மகனை அவன் தாயினிடம் ஒப்புவித்தார்.

**யவீருவின் மகனை** மரித்த சிறிது நேரத்திலும், **நாயீனூர் விதவையின் மகனை** அவனது உடலை அடக்கம் செய்ய எடுத்துச் செல்லும் சமயத்திலும், **லாசருவை** இறந்து நான்கு நாட்களுக்குப் பிறகும் உயிரோடு எழுப்பினார்.

மரணமடைந்தவர்கள் அநேகரை எலியாவும், எலிசாவும் உயிரோடு எழுப்பியிருந்தபடியால், இயேசுவும் ஒரு மகா பெரிய தீர்க்கதரிசி என்று மக்கள் கருதினர். இயேசு ஒரு தீர்க்கதரிசி மட்டுமல்ல, அவர் நம் தேவன், கர்த்தர், சர்வ வல்லமையுள்ளவர். மேலும் அற்புதங்கள் தேவனை மகிமைப்படுத்துகின்றன.

**"எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள் – ஆசீர்வாதம் எண்ணு ஒவ்வொன்றாய் – கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்."**

பிறந்த நாள், திருமண நாள், விசேஷ தினங்கள் இவைகள் எல்லாவற்றிலும் நாம் கடந்து வந்த பாதையிலும், நம்மை கரம்பிடித்து நடத்தி ஒவ்வொரு சூழ்நிலையிலும், ஒவ்வொரு விதமான ஆசீர்வாதத்தைத் தந்து நம்மை சந்தோஷப்படுத்தின தேவனுக்கு நாம் நன்றி செலுத்தும் மக்களாக வாழ வேண்டும்.

## *III. 5 அப்பம் 2 மீன்களையும் கொண்டு 5000 பேருக்கு போஷித்தல்*

**எல்லோரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். மேலும் அப்பங்களிலும் மீன்களிலும் மீதியான**

**துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள் (மாற்கு 6 : 42, 43)**

**<u>20 அப்பங்களைக் கொண்டு 100 பேருக்கு போஷித்தல் (எலிசா செய்தது)</u>**

**கர்த்தருடைய வார்த்தையின்படியே அவர்கள் சாப்பிட்டதுமன்றி மீதியும் இருந்தது (2 இராஜா 4 : 42–44).**

மாற்கு 6 : 37-44 மற்றும் மாற்கு 8 : 1-9 வசனங்களைப் படித்தால் நாம் ஆகாரம் இல்லாமல் இருந்தால் நம் ஆண்டவர் நமக்காகப் **பரிதபிக்கிறவராய்** (8 : 2) காணப்படுகிறார். இரண்டாவதாக, நாம் யாரையும் பசியோடு அனுப்பி வைக்கக் கூடாது. அப்படி நாம் அனுப்பினால், அந்த ஜனங்கள் **சோர்ந்து போவார்களே** என்ற எண்ணம் நமக்குள் வரவேண்டும்.

மூன்று நாட்களாக ஆண்டவரின் பிரசங்கச் செய்தியைத் திரளான ஜனங்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். எல்லாம் முடிந்து அவரவர் ஊர்களுக்கு புறப்படும் சமயத்தில், அவர்களை பட்டினியாய் அனுப்பிவிட ஆண்டவருக்கு மனதில்லாதிருந்தது. அங்கே அவர்களுக்கு ஆகாரம் கொடுத்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானித்தார்.

ஒரு பையன் தன்னுடைய சாப்பாட்டிற்காக ஐந்து அப்பங்களும், இரண்டு மீனும் கொண்டு வந்ததைக் கண்ட கிறிஸ்துவானவர், ஜனங்களை புல்வெளியில் அமரச்செய்து, அப்பங்களையும், மீனையும் ஆசீர்வதித்து, பரிமாறும்படி தம்முடைய சீடர்களுக்குச் சொல்லுகிறார்.

“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு” என்பது பழமொழி. பொருளை சேமிப்பதற்காக கடல் தாண்டி நாம் செல்லுகிறோம். எல்லாமே நம்முடைய ஆகாரத்திற்காகவே. எவ்வளவுதான் திடகாத்திரமான உடலாக இருந்தாலும், பசிவந்தால் பத்தும் பறந்து விடும். உடல் துவண்டுபோய் விடும். ஒரு நேரம் தாமதமாக ஆகாரம் கிடைத்தாலே களைப்பு அதிகமாகி மயக்கத்தில் கொண்டு வந்து விடும். மூன்று நாட்களாக ஆகாரம் இல்லாதிருந்ததைக் கண்ணுற்ற நம் ஆண்டவர், வந்த அனைத்து ஜனங்களும் சாப்பிட்டு மீதி துணிக்கைகளை எடுத்துப் போட்டதில் பன்னிரண்டு கூடை (12 Baskets) நிறைய எடுத்தார்கள்.

கர்த்தர் அநேக அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்திருக்கிறார். ஆனால், ஒரு மனிதனுக்கு அதிமுக்கியமாகத் தேவையானது மூன்று. உணவு, உடை, தங்குமிடம். இந்த மூன்றில் முதலாவதாக வருவது உணவு. ஆகவேதான் ஆண்டவராகிய இயேசுவானவர் கூட்டத்திற்கு வந்திருந்த எல்லோரும் திருப்தியாய் சாப்பிடும் அளவுக்கு 5 அப்பம் 2 மீன் துண்டுகளைக் கொண்டு (புருஷர்கள் மட்டும் 5000 பேர்) கிட்டத்தட்ட 10,000 பேரை போஷிக்க அவருடைய மகிமை வெளிப்பட்டது.

கர்த்தருடைய கிருபை மட்டும் நம்மேல் இருக்க வேண்டுமானால், அவர் விரும்பும் பாதையில் அவர் சொல்கேட்டு நடப்போமானால், நம் ஆண்டவர் செய்யும் அற்புதங்களையும், அதிசயங்களையும் மனிதராகிய நம் எல்லோராலும் செய்ய முடியும்.

எலியாவிடமிருந்து இரட்டிப்பான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட எலிசா, ஒரு சமயம் பானையிலே காய்ச்சப்பட்ட கூழானது கசப்பு கலந்ததாக இருந்தபோது, அதை அற்புதமாக நல்ல கூழாக மாற்றிப் போட்டது கர்த்தர் எலிசாவுக்கு செய்த பெரிய கிருபை. அதேபோல் 20 அப்பங்களைக் கொண்டு 100 பேருக்கு உணவு அளித்த அதிசயமும் கர்த்தரின் கிருபையினால் எலிசா தீர்க்கன் செய்தது (2 இராஜா 4 : 38-44).

பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார் (அப். 19 : 11).

புறஜாதியாருக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டுமென்று தேவனால் அழைப்பு பெற்றவர் அப்போஸ்தலனாகிய பவுல். தேவனுடைய அழைப்பை ஏற்று பதிமூன்று மடல்களை பலவித கஷ்டமான சூழ்நிலையில் எழுதினார். (ரோமர் - பிலேமோன்) பட்டினியாய் இருந்தார், கசையடி வாங்கியிருக்கிறார். ரோம குடியுரிமை பெற்றவராயிருந்தாலும், ரோமர்களால் அநேகப் பாடுகளை அனுபவித்தவர். தன் சரீரத்திலே இருந்த முள்ளான ஒரு கஷ்டம் நீங்குமாறு மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டினார் ( 2 கொரி 12 : 7-9) அதற்கு கர்த்தர்: என் கிருபை உனக்குப் போதும் என்றார்.

கர்த்தருடைய கிருபை பவுலின் மீது பரிபூரணமாயிருந்தபடியால் அவனுடைய (பவுலினுடைய) சரீரத்திலிருந்து உறுமால்களையும், கச்சைகளையும் கொண்டு வந்து வியாதியஸ்தர்கள் மேல் போட்ட போது, வியாதிகள் அவர்களை விட்டு நீங்கிப் போயின. அசுத்த ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன. பார்த்தீர்களா! சவுலாக இருந்த பவுலை எப்படியெல்லாம் கர்த்தர் நடத்தினார் என்பதை; எல்லாவற்றிற்கும் காரணம் ஆண்டவராகிய கிறிஸ்துவை சந்தித்தப் பிறகு பரிசுத்த ஜீவியத்திலிருந்து அவர் வாழ்க்கை விலகிப் போகவில்லை. பவுலின் கரத்தினால் எழுதின 13 மடல்களையும் படித்து, கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் பிள்ளைகளாக மனம் மாறுவோமாக.

தாழ்மைக்கு எடுத்துக்காட்டாக மாட்டுத் தொழுவத்தில் முன்னணையிலே பிறந்து, பெற்றோர்க்கு கீழ்ப்படிந்து, தன்னுடைய வளர்ப்புத் தந்தையின் தச்சுவேலையில் தானும் உதவியாயிருந்து, மூன்றரை வருடமாக ஊழியப்பாதையிலே அநேகரை நேரில் கண்டும், அருகில் கண்டும், தூரத்தில் கண்டும் அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தும், கல்வாரியில் தன் தாயை அருமையான சீஷனிடம் ஒப்படைத்து, மகன் என்ற கடமையை நிறைவேற்றி, மனிதகுல மீட்புக்காக தன் ஜீவனையே கொடுத்து, சாத்தானை வென்று உயிர்த்தெழுந்து பரலோகத்தில் இந்த நிமிடம் வரை பரிந்து பேசுபவராக காணப்படுகிறார்.

தண்ணீரைத் திராட்சரசமாக்கின தேவன், தண்ணீரிலே மிகப்பெரிய அற்புத மாற்றத்தைக் கொண்டு வந்து, கல்யாண வீட்டார் மற்றும் பந்தி விசாரிப்புக்காரனையும் வியப்பில் ஆழ்த்தும் அளவுக்கு, ருசியான ரசத்தைக் கொடுத்து, தான் ஒரு மெய்யான தேவன் என்றும், தன்னுடைய வல்லமையையும், மகிமையையும் வெளிப்படுத்திய ஜீவனுள்ள அற்புத நாதர். மாராவின் தண்ணீரை மதுரமாக்கின தேவனுக்கு துதியையும், ஸ்தோத்திரத்தையும் செலுத்துவோமாக!

ஆண்டவர், விதவையின் மகனை உயிரோடு எழுப்பியதன் நோக்கம், கணவனை இழந்து தனக்கென்று இருந்த ஒரே துணை, அவள் மகன் மட்டுமே. மேலும் குடும்ப பொருளாதாரத்தையும், தாயையும் சீர்தூக்கிப் பார்த்து வந்தது, அவளின் மகன் மாத்திரமே. அந்த மகனும் மரித்துப் போனபடியால் அந்த விதவையை பராமரிக்க வேறு யாரும் இல்லாத நிலை. இயேசு கிறிஸ்து பார்க்கிறார். மரித்த வாலிபனை உயிரோடு எழுப்பி, விதவையின் கரத்தில் ஒப்புவித்தார். 1 இரா. 17-ஆம் அதிகாரத்தில் விதவையின் ஏழ்மை நிலையை (சாறிபாத் விதவை) எலியா மூலம் தீர்த்து வைத்தார். 2 இராஜா 4-ஆம் அதிகாரத்தில், ஒரு விதவையை பார்க்கிறோம். கடனை திருப்பித் தரமுடியாத ஒரு சூழ்நிலை. தேவன் எலிசா மூலம் ஒரு அற்புதத்தை நிகழ்த்தி இரண்டு மகன்களையும், விதவையையும் காப்பாற்றினார். விதவைகளைக் கரிசனையோடு நடத்துவோம், இரக்கம் காட்டுவோம்; கஷ்டத்திலே உதவிக் கரம் நீட்டுவோம்.

5 அப்பம் + 2 மீன், 7 அப்பம் + சில, சிறு மீன்களையும் கிறிஸ்துவானவர், ஆசீர்வதித்து திருப்தியாய் சாப்பிடும் அளவுக்கு அந்த உணவு பதார்த்தங்கள் நிறைவாய் காணப்பட்டதின் அற்புதம் அவருடைய மகிமையும், மகத்துவமுமே. சாப்பாடு என்று கேட்டு வருபவர்கள் யாராக இருந்தாலும், நம்மால் முடிந்த ஒரு உதவியைச் செய்து அவர்கள் பசியாற்றுவது நல்லது.

ஹென்றி என்ற பையன் ஒருநாள் அதிக பசியோடு இருந்தான். அருகில் உள்ள வீடுகளில் எல்லாம் உணவுக்காக கெஞ்சினான். யாரும் எதுவும் கொடுக்கவில்லை. இறுதியில் ஒரு வயதானத் தாய் ஒரு டம்ளர் பால் கொண்டு வந்து கொடுத்தார்கள். அதை அருந்திவிட்டு நன்றி கூறி விடைபெற்றான். வருடங்கள் உருண்டோடின. ஒருநாள் அந்த வயதானத்தாய் சுகவீனமடைந்து, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பலவித கஷ்டத்தின் மத்தியில் ஹென்றி அந்த மருத்துவமனையில் டாக்டராக வேலை செய்து கொண்டிருந்தார். அந்த வயதானத்தாய் யார் என்று தெரிந்து கொண்டார், டாக்டர் ஹென்றி. நல்ல சுகம் பெற்று டிஸ்சார்ஜ் (Discharge) ஆகிப்போகும் சமயத்தில் எவ்வளவு பணம் கட்ட வேண்டுமன்று அந்த தாய் கேட்டபோது, டாக்டர் ஹென்றி கீழ்கண்டவாறு எழுதிக் கொடுத்தார். "Your Medical Bill is equal to a cup of Milk"என்று எழுதியிருந்தது. நாம் செய்யும் ஒவ்வொரு உதவிக்கும் கர்த்தர் நமக்கு இரட்டிப்பான நன்மையினால் முடிசூட்டுவார். காரணம்,

*''சர்வ சிருஷ்டிக்கும் எஜமானர்*
*சர்வ சிருஷ்டியைக் காப்பவர்.''*

எல்லோரையும் காத்து வழிநடத்தும் கர்த்தர், நம்மை ஒருபோதும் ஆதரவற்ற பிள்ளைகளாய் விடவே மாட்டார். எந்த ஒரு குறையையும் நீக்கி, நிறைகுடமாக மற்றவர்கள் மத்தியில் நம்மை உயர்த்துவார். திக்கற்றவர்களை ஆதரித்தால், நம்மை கர்த்தர் ஆசீர்வதிப்பார்; மெய் சமாதானம் நம் உள்ளத்தையும், இல்லத்தையும் சூழ்ந்து கொள்ளச் செய்வார். ஏசாயா 53–ஆம் அதிகாரத்தில் உள்ளபடி, இயேசு கிறிஸ்து நமக்காக பலபாடுகள்பட்டு, சிலுவையின் மரணத்தை ஏற்றுக்கொண்டு, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார். மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, வெற்றி சிறந்தார். நாமும் பாவத்திற்கு மரித்து, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருப்போம்!

ஆமென்!

**– சகோதரி. பேர்ல் குயின்ராஜா**

# உலகச் செய்திகள்

★ வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி 13.02.2025 அன்று அமல்படுத்தப்பட்டது. மாநில சட்டப்பேரவை முடக்கி வைக்கப்பட்டுள்ளது. மணிப்பூரில் என். பிரேன்சிங், தலைமையில் பா.ஜ.க. ஆட்சி நடைபெற்று வந்த நிலையில், முதல்வர் பதவியில் இருந்து அவர் கடந்த 09.02.2025 அன்று ராஜினாமா செய்தார்.

★ தெலுங்கானா தலைநகர் ஹைதராபாத்தில், அமெரிக்காவைச் சேர்ந்த மென்பொருள் நிறுவனமான மைக்ரோசாப்ட்டின் புதிய வளாகத்தை, அந்த மாநில முதல்வர் ஏ. ரேவந்த் ரெட்டி திறந்து வைத்தார்.

★ தேசிய விளையாட்டுப் போட்டிகளில், டேபிள் டென்னிஸில் தமிழகத்துக்கு 3 தங்கம், 1 வெள்ளி என 4 பதக்கங்கள் கிடைத்தன.

★ இந்தியா–அமெரிக்கா இடையேயான இருதரப்பு வர்த்தகத்தை வரும் 2030–ஆம் ஆண்டுக்குள் 43.31 லட்சம் கோடி (500 பில்லியன் டாலர்) அளவுக்கு இரட்டிப்பாக்க இருநாடுகளும் முடிவு செய்துள்ளன.

# ஆசிரியர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" (மத். 6 : 33).**

தேவனுடைய ராஜ்யம் என்பது பரலோக ராஜ்யத்தைக் குறிக்கிறது. தேவனுடைய நீதி என்பது, இந்த பூமியில் பரிசுத்தமாயும், தேவனுக்குப் பிரியமாயும், மனிதன் வாழ்வதற்கு கர்த்தர் கொடுத்த சட்டங்களும், நியாயங்களுமாகும்.

பூமியில் வாழுகிற அநேக ஜனங்களுடைய பிரயாசம் முழுவதும் எப்படியாவது தனக்கும், தனது குடும்பத்திற்கும் தேவையான சொத்துக்களை சேர்ப்பதும், பொருட்களை வாங்குவதுமாகும். அதற்காகவே தன் வாழ்நாள் முழுவதும் அதிகமாய் நேரத்தையும், உழைப்பையும் செலவிடுகிறார்கள். மறுமைக்குரிய வாழ்க்கைக்கே (பரலோக வாழ்வு) நாம் பிரதானமாக இந்த பூமியில் பிரயாசப்பட வேண்டும். பூமியிலே சேர்க்கிற பொக்கிஷங்களைப் பூச்சியும், துருவும் கெடுக்கும். திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். ஆதலால் பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கு பூச்சியும், துருவும் கெடுப்பதில்லை, திருடரும் திருடுகிறதுமில்லை என்று இயேசு கூறுகிறார்.

**"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்"** என்று, யோவான் 3 : 5-இல் இயேசு கூறுகிறார். இந்த உலகத்தில் பிறக்கிற ஒவ்வொருவரும் தன் வாழ்நாளில் நன்மை தீமை அறியத்தக்க வயதிற்குப் பிறகு, தன் பாவங்களை அறிக்கையிட்டு, மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுப்பதே, ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறக்கிற அனுபவமாகும்.

சாலொமோனை இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக ஏற்படுத்திய பின்பு, சாலொமோன் ராஜா தேவனிடத்தில் முதலாவதாக கேட்ட காரியம், இஸ்ரவேல் ஜனங்களை நீதியாய் நியாயம் விசாரிப்பதற்கு தேவையான ஞானமுள்ள இருதயத்தைத் தாரும் என்று வேண்டிக் கொண்டான். அவன், ஐசுவரியத்தையும், நீடித்த நாட்களையும் கேளாமல் இதைக் கேட்டது தேவனுடைய பார்வைக்கு உகந்ததாயிருந்தது. அதனால், தேவன் சாலொமோனுக்கு அவன் கேளாத ஐசுவரியத்தையும், மகிமையையும் தந்தார். இயேசு தெரிந்துக் கொண்ட 12 சீடர்களில், ஒருவனான யூதாஸ், முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுவை காட்டிக் கொடுத்து, அவனுடைய மேன்மையான அந்த ஊழியத்தையும், பரலோகவாழ்வையும் இழந்து போனான்.

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், இந்த உலகத்தில் வாழ்கிற நாட்களில், பரலோக ராஜ்யத்திற்கு நம்மை தகுதிப்படுத்துவதுடன், மற்ற ஜனங்களும் கர்த்தருடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க பிரயாசப்பட வேண்டும்.

**மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் "அவனுக்கு லாபம் என்ன?" மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? (மத்.16 : 26).**

கடந்த பிப்ரவரி மாதம் 24-ஆம் தேதியிலிருந்து 28-ஆம் தேதி வரை, ஒடிஷா மாநிலம் கலிமலா IMST வளாகத்தில் நடைபெற்ற Translatation Training and Checking நிகழ்வில், சட்டிஸ்கர் மாநிலத்திலிருந்து குடுக் மொழிபெயர்ப்பாளர் சகோ. சோபத்ராமும், ஒடிஷா மாநிலத்திலிருந்து, மிர்கான், கலகாண்டியா, தெஷியா, சம்பல்புரி, சோரா, குவி, கடபா மற்றும் கோண்டாபொர்ஜா மொழிபெயர்ப்பாளர்கள் பங்கு பெற்றனர். IMS மிஷனெரி திருமதி. கிரிஜா ஐசக் இப்பயிற்சியினை நடத்தினார். கோவை IBT

அலுவலகத்திலிருந்து சகோ. எஸ்றா காலேப்பும், இதில் இரண்டு நாட்கள் பங்கேற்றார். IBT பணித்தள இயக்குநர் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள் இப்பணிகளை மேற்பார்வை செய்தார்.

இருளா குஞ்சப்பனை மொழிபெயர்ப்பாளர் சகோ. ராஜாவிற்கு மொழிபெயர்ப்புப் பணிகளைக் குறித்து முக்கிய குறிப்புகளை திரு. எஸ்.என். சங்கர் அவர்கள் 3 நாட்கள் IBT சென்டரில் விளக்கமாகக் கூறினார்.

கடந்த ஜனவரி மாதம் 11, 12 தேதிகளில் கோவை IBT மையத்தில் IBT-இன் இவ்வருட முதல் திட்டக்கூடுகையும், 11–ஆம் தேதி மாலையில் நிர்வாகக்குழு கூட்டமும் நடைபெற்றன. கடந்த மார்ச் மாதம் 8–ஆம் தேதியன்று, முன்னேற்றப் பணியாளர்களுக்கான கூட்டம் கோவை IBT மையத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு மற்றும் கேரளாவில் பணிபுரியும் முன்னேற்றப் பணியாளர்கள், IBT-இன் நிர்வாகிகளும் பங்கு பெற்றார்கள். முன்னேற்றப் பணியாளர்களின் கடந்த வருடப் பணிகள் ஆய்வு செய்யப்பட்டு, தங்கள் பணிகளை மேலும் சிறப்பாகச் செய்யக்கூடிய நல்ல ஆலோசனைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் அதிகமான ஊர்களுக்குத் தேவைப்படுகிறார்கள். அர்ப்பணிப்புள்ள வாலிபர்கள் IBT ஊழியத்திற்குக் கிடைக்கவும், மொழிபெயர்ப்பாளர்கள் புதிய மொழிகளுக்குக் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

கர்த்தர் உங்கள் அனைவரையும் அபரிமிதமாக ஆசீர்வதித்து உயர்த்துவாராக.

ஷாலோம்!

கர்த்தரின் பணியில்,
உங்கள் சகோதரன் *K. ஜெய்சிங்*

# அயலார்

## *அண்டை வீட்டாரோடு எப்படி சண்டையைத் தடுப்பது?*

ஒருவர் ஒரு புதுப் பண்ணையை விலைக்கு வாங்கினார். அவரது புதுப் பண்ணைக்கு அருகாமையில் இருந்த அடுத்த பண்ணைக்காரரை ஒருநாள் தற்செயலாக சந்தித்தார். அப்பொழுது, “இந்தப் பண்ணையை புதிதாக வாங்கியிருக்கிறது நீர்தானா?” – என்று கேட்க, அதற்கு ‘ஆம்’ என்று பதில் கொடுத்தார். “இந்தப் பண்ணையில் சில எல்லைத் தகராறு இருக்குங்க. அது தெரியாம நீங்க வாங்கிட்டீங்க”. “என்ன எல்லைப் பிரச்சனை?” – அடுத்த பண்ணைக்காரர் புதிய பண்ணை வாங்கியவரைப் பார்த்து, “இங்க பாருங்க, உங்க பண்ணையின் பழைய ‘ஓனர்’ என்னுடைய பண்ணையின் நிலத்தில் பத்து அடி உள்ளே தள்ளி வேலி போட்டிருக்கிறார். இதை நான் கோர்ட்டில் போட்டு இதை நிரூபிக்கப் போகிறேன்”. இதைக் கேட்டவுடனே, புதிய பண்ணையை வாங்கியவர், “ஓ, உங்க நிலத்துக்குள் எனது வேலி இருந்தால் நாளைக்கே அதைத் தள்ளிப்போட்டு விடுகிறேன். தயவு செய்து கோர்ட்டுக்குப் போக வேண்டாம். நானே மாற்றிப் போடுகிறேன்” – என்றார். உண்மையிலேயே, தள்ளிப் போட்டுருவீங்களா? ‘நிச்சயமாக’ – என்றார். இதைக் கேட்டவுடனே, “அப்படியானால், இந்த வேலி இப்ப இருக்கிற மாதிரியே இருக்கட்டும். மாற்ற அவசியமில்லை” என்றார் பக்கத்து பண்ணைக்காரர்.

**“மெதுவான மாறுத்தரம் சண்டையை அமர்த்தும்.” (நீதி.15:1)**

(“உயிருள்ள உதாரணங்கள்” என்ற புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது)

# பணித்தளச் செய்திகள்

*<u>மிஷனெரி : சகோ. சம்பத்குமார்</u>*
*<u>பணித்தளம் : பொதர்காம் (ஒடிஷா)</u>*

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதத்தில் தாமன்ஜோடி பணித்தளத்தில் இருந்து பொதர்காம் பணித்தளத்திற்கு மாற்றலாகி வந்து என் பணியில் சேர்ந்து கொண்டேன்.

மிஷனெரிப் பணிக்காக பொதர்காம், தாமன் ஜோடி, தரல்குடா, செமிலிகுடா, அம்புகம், ஹஞ்சிரகுடா, துதாரி, ராம்பள்ளி, கொசகமுடா, ராணிகுடா, காட்பாகுடா, பதம்டா, பட்பூர், பனுவகுடா, நங்கநால் ஆகிய கிராமங்களுக்குச் சென்று, பல மக்களைச் சந்தித்து நற்செய்தியை அறிவித்து, அவர்களுக்கு நற்செய்திப் புத்தகங்கள் மற்றும் கைப்பிரதிகளைக் கொடுத்து அவர்களுக்காக ஜெபித்தேன். சகோ. பத்ரம், ஹண்டி, கேஷப், பாலி, பிப்லா, திலிப் ஆகியோர் மிகவும் வாஞ்சையுடன் தேவ செய்தியைக் கேட்டார்கள். மூச்சு விடுவதற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்த சகோதரி லட்சுமி சுகம் அடைய ஜெபித்ததின் மூலமாக, கர்த்தர் அந்த சகோதரிக்கு சுகம் கொடுத்தார். ஞாயிறு ஆராதனை, உபவாச ஜெபக்கூட்டம், வீட்டு ஜெபக்கூட்டம் நடத்தப்பட்டன. என் மிஷனெரிப் பணி மற்றும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*<u>மொழிபெயர்ப்பாளர் : சகோ. பிரகாஷ் சித்தி</u>*
*<u>மொழி : சித்தி</u>*
*<u>பணித்தளம் : சித்தாப்பூர் (கர்நாடகா)</u>*

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

ஜனவரி மாதத்தில் என் மொழிபெயர்ப்புப் பணியில் புதிய ஏற்பாடு பாகத்தில், 1 கொரி. அதிகாரம் 12 : 1-ஆம் வசனம் முதல், அதிகாரம் 16 : 24 வரை, கணினியில் கீ-இன் செய்யப்பட்டன. IBT அலுவலகத்திலிருந்து கூறப்பட்டபடி, ஜனவரி 13-ஆம் தேதியிலிருந்து 17-ஆம் தேதி வரை பெங்களூரிலுள்ள BSI அலுவலகம் சென்று, அங்கு நடந்த மொழிபெயர்ப்பு பயிற்சி மற்றும் சரிபார்ப்புப் பணியில் கலந்து கொண்டேன். சித்தி மொழியில் மொழிபெயர்ப்பு மற்றும் கீ-இன் செய்யப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார்கள். அவர்கள் கூறியபடி, 1 பேதுரு 5-அதிகாரங்கள், 2 பேதுரு 3-அதிகாரங்கள், 1 யோவான் 5-அதிகாரங்கள், 2 யோவான் 1-அதிகாரம், 3 யோவான் 1-அதிகாரம் மற்றும் யூதா ஆகியன கணினியில் கீ-இன் செய்யப்பட்டன.

மிஷனெரிப் பணிக்காக தகாட்டி என்ற கிராமத்திற்குச் சென்றபோது, அங்குள்ள விசுவாசியின் மகன் நடக்க முடியாமல், கை தூக்க முடியாமல் இருந்தான். காரணம் கேட்ட போது அவன் மகாராஷ்டிரா மாநிலத்திற்கு வேலைக்காக சென்று திரும்பிய போது, சில ரௌடி கும்பல் இவனைப் பிடித்து அடித்து துன்புறுத்தி, இவனிடமிருந்த பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர். ஒரு சில நல்லவர்கள் இவனை மருத்துவமனைக்குக் கூட்டிச்சென்று, சிகிச்சை அளித்து வீட்டிற்குக் கூட்டி வந்துள்ளனர். இவன் நன்கு நடக்கவும், பூரண சுகம் பெறவும் ஜெபிக்க கேட்டதால், அவன் சுகத்திற்காக பாரத்துடன் ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அந்த வாலிபனுக்கு பூரண சுகம் கொடுத்தார். தேவ நாமம் மகிமைப்படுவதாக. என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் :*
*சகோ. அல்டாஃப் ஹுஃசைன்*
*மொழி : டிங்கால்*
*பணித்தளம் : டோங் (ராஜஸ்தான்)*

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கர்த்தரின் பெரிதான கிருபையால் கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் கடினமான பகுதிகள் மத்தேயு அதிகாரம் 1 : 1 முதல் அதிகாரம் 16 : 28 வரையிலும், லூக்கா அதிகாரம் 1 : 1 முதல் அதி. 14 : 35 வரையிலும், வெளிப்படுத்தின விசேஷம் அதி. 9 : 1 முதல் அதி. 22 : 21 வரையிலும் மறுசரிபார்ப்புச் செய்யப்பட்டது. மிஷனெரிப் பணியில் நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டேன். கடந்த பிப்ரவரி மாதம் கோவை IBT அலுவலகம் சென்று, மற்ற மொழிபெயர்ப்பாளர்களுடன் அவரவர் மொழியில் உள்ள மொழிபெயர்ப்புச் சார்ந்த பணிகளைச் செய்தோம். பழைய ஏற்பாடு பாகத்தில் உள்ள சங்கீதப் புத்தகம் மொழிபெயர்ப்பு பணியை 1-ஆம் சங்கீதம் முதல் ஆரம்பித்தேன். என் மொழி டிங்காலிலுள்ள புதிய ஏற்பாடு முழுவதும் விரைவில் Wycliffe India நிறுவனம் மூலமாக சரிபார்ப்பு செய்யப்பட வேண்டும். இப்பணி துரிதமாக ஆரம்பிக்கப்படவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :*
*சகோ. கடா மண்டல்*
*மொழி : சோரா*
*பணித்தளம் : பரலக்கா மண்டி (ஒடிஷா)*

கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில், கணினியில் கீ-இன் செய்யப்பட்ட புத்தகங்கள் சரிபார்ப்புப் பணி மேற்கொள்ளப்பட்டன. மேலும் நற்செய்திப் பணியும் செய்தேன். மொழிபெயர்ப்பு சரிபார்ப்புப் பணியில் யோவான் நற்செய்தி புத்தகம், அதிகாரம் 1 முதல் அதி 21 வரையிலும், அப்போஸ்தலருடைய நடபடிகள், அதிகாரம் 1 முதல், அதி. 16 வரையிலும், சரிபார்ப்பு செய்யப்பட்டன. இதில் பாரா சரி செய்தல், கமா, மேற்கோள் காட்டுதல் ஆகியவை பார்க்கப்பட்டன.

கன் சோடா, ஜீபா சபைகளுக்குச் சென்று ஞாயிறு ஆராதனைகளில் பங்கு பெற்றேன். அங்குள்ள பாஸ்டர். ரஜட், மற்றும் மூத்த உறுப்பினர்களைச் சந்தித்து ஊழியத்தைப் பகிர்ந்து கொண்டேன். அச்சபைகளில் என் சாட்சிகளையும் என் மொழிபெயர்ப்புப் பணிகள் குறித்தும் விளக்கிக் கூறினேன். பிலிப்பியர் அதிகாரம் 1: 20-23 மற்றும் 3 : 10-12 பகுதிகளை அடிப்படையாக வைத்து தேவ செய்தியைப் பகிர்ந்து கொண்டேன். சபை மக்களுக்காக ஜெபித்து சோரா மொழியில் உள்ள பாடல் புத்தகங்களை, அச்சபை மக்களுக்கு விநியோகம் செய்தேன். பரிசுத்த நற்கருணையிலும் பங்கு கொண்டேன். சகோ. உபேந்திரா, விக்ரம், லாவண்யா, எலிசா, சுஜிந்திரா இவர்களுக்கு என் மொழிபெயர்ப்புக் குறித்து புதிய காரியங்களை விளக்கிக் கூறினேன்.

*மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :*
*சகோ. கிறிஸ்துதான் நம்ரசில்*
*மொழி : தெஷியா*
*பணித்தளம் : பொண்டுகுடா (ஒடிஷா)*

கர்த்தரின் நாமம் துதிக்கப்படுவதாக!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு பாகத்தில், யோபு புத்தகம் அதிகாரம் 40 முதல் 42 வரையிலும், எரேமியா அதிகாரம் 1 முதல் அதிகாரம் 31 வரையிலும், கணினியில் கீ-இன் செய்யப்பட்டன. மிஷனெரிப் பணிக்காக பொண்டுகுடா, கௌலி, மாலிஷாஹி, பர்ஜகுடா ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டேன். ஞாயிறு துதி ஆராதனை பொண்டுகுடா மற்றும் கௌலி பணித்தளங்களில் நடத்தப்பட்டன. வீட்டு ஜெபக்கூட்டமும் நடத்தப்பட்டன. சகோ. தேவராஜ் அவர்கள் மனைவி, திரு. தாமு, திரு. தாரா ஆகியோர் மிகவும் வாஞ்சையுடன் நற்செய்தியைக் கேட்டார்கள். என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# எமது தரிசனமும், எமது பணியும்

**<u>எமது தரிசனம் :</u> "இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே"**

**<u>எமது பணி :</u>** கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது.

மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் "ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை" அமைத்து அனுப்புதல்.

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தனர்

திருநெல்வேலி, சுவிசேஷபுரத்தில் வசித்துவந்த IBT-இன் மூத்த பிரதிநிதியாக செயல்பட்ட **திரு. சௌந்தர பாண்டியன் அவர்கள்** 14.02.2025–ஆம் தேதியன்றும், ஈரோட்டில் வசித்து வந்த IBT-இன் மூத்த பிரதிநிதியாகப் பணியாற்றிய **திரு. இன்பராஜன் அவர்கள்** 28.02.2025–ஆம் தேதியன்றும் **கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்.** இவர்கள் இருவரையும் பிரிந்து, துயரத்திலிருக்கும் இரு குடும்பத்தார்களுக்கும் கர்த்தர் பரத்திலிருந்து **ஆறுதலையும், சமாதானத்தையும் கொடுக்க** ஜெபியுங்கள்.



# கன்னியாகுமரி மாவட்டத்தின் கிறிஸ்தவத்தின் தந்தை
# ரிங்கெல் டௌபே
## (கி.பி. 1770)
### சென்ற இதழ் தொடர்ச்சி...

*<u>திவான் வேலுத்தம்பியின் கிறிஸ்தவ எதிர்ப்பும், கிறிஸ்தவர்கள் கொல்லப்படுதலும் :</u>*

திவான் வேலுத்தம்பி "கிறிஸ்தவ மார்க்கத்திற்கு திருவாங்கூர் நாட்டில் இடமில்லை'' என்று மறுத்துவிட்டார். எனினும், கிறிஸ்தவம் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் குறிப்பாக நாடார் சமூகத்தினர் மத்தியில் வேர் கொண்டது. கிறிஸ்தவ மார்க்கத்தின் பரவுதல் திவான் வேலுத்தம்பிக்கு பெரும் எரிச்சலையும், கோபத்தையும் உண்டாக்கியது. அவர் கொச்சி திவானுடனும் பேசி, அப்பகுதியில் பிரிட்டிஷ் அரசின் செல்வாக்கையும்

கிறிஸ்தவர்களையும் அழிக்கத் திட்டமிட்டு 1808-ஆம் டிசம்பர் 28-ஆம் நாள் கேனல் ரெசிடென்ட் மெக்காலே வீட்டை முற்றுகையிட்டு அவரைக் கொல்ல முயற்சித்தனர். ஆனாலும், கேனல் மெக்காலே தப்பிவிட்டார். மூர்க்க கோபம் கொண்ட திவான் வேலுத்தம்பி திருவாங்கூர் படையை வருவித்து எங்கெங்கு கிறிஸ்தவர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் அநேக அப்பாவி கிறஸ்தவர்களைக் கொலை செய்தனர். 3000-க்கும் மேற்பட்ட ஆண் பெண் உட்பட சித்திரவதைக்கு ஆளானார்கள். அவர் கைகால்கள் வெட்டப்பட்டு முடமாக்கப்பட்டனர். (Maimed) ஆடு, மாடுகளை வெட்டுவதுபோல் வெட்டி (Butchered) நீரோடைக்குள் (Back Waters) எறிந்தனர். இதில் மிகவும் பாதிக்குள்ளானவர்கள் மயிலாடி கிறிஸ்தவர்களே. கேனல் மெக்காலேயையும், வேதமாணிக்கத்தையும் தேடிப்பிடித்து கொலை செய்யத் திட்டமிட்டனர். எனினும், கேனல் மெக்காலே கிறிஸ்தவர்களை அழித்த திருவாங்கூர் இராஜாவின் படைப்பிரிவினர் படுதோல்வி அடைந்தனர். தோல்வியை சந்தித்த திவான் வேலுத்தம்பி தற்கொலை செய்து கொண்டான். பிரிட்டிஷ் கேனல் மெக்காலேயி கை ஓங்கியது. இந்த சூழ்நிலையில் திருவாங்கூர் இராஜா பகையை வளர்த்துக் கொள்ள விரும்பவில்லை. சுமூகமான சூழ்நிலை உருவாயிற்று. கிறிஸ்தவத்தின் வித்து வேரூன்ற ஆரம்பித்தது.

## *மயிலாடியில் கிறிஸ்தவ ஆலயம் :*

மறுபடியும் மயிலாடியில் கிறிஸ்தவ ஆலயம் கட்ட அனுமதி கேட்டனர். திருவாங்கூர் அரசின் அறிவுரை பெற்று அணுகுமுறையை மாற்றிக் கொண்டு உள்ளூர் அரசு அதிகாரிகள் ஆலயம் கட்ட அனுமதி வழங்கியதோடு இலவசமாக கற்களும், தேக்கு மரங்களையும் கொடுத்தனர். வேத மாணிக்கமும், ஞான முத்தும் தங்களுடைய இடத்தை ஆலயம் கட்டக் கொடுத்தனர். ஆலயப் பணிக்கு மக்கள் உற்சாகமாய்க் கொடுத்தார்கள். நான்கே மாதத்தில் மயிலாடியில் ஆலயம் எழும்பிற்று. செப்டம்பர் மாதம் 1809-இல் பெருத்த ஆரவாரத்தோடும், மகிழ்ச்சியோடும் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. திருவிருந்து ஆராதனை நடைபெற்றது. அநேக மக்கள் பாவ அறிக்கை செய்து ஞானஸ்நானம் பெற்றனர். தெற்கு திருவாங்கூரில் முதல் புராட்டஸ்டன்ட் ஆலயம் உருவாயிற்று. 1810-ஆம் ஆண்டுகளுக்குள்ளாக **பிச்சை குடியிருப்பு, புத்தளம், கோவில்விளை, அத்திக்காடு, ஈத்தாம்பொழி, தாமரைக்குளம்** ஆகிய இடங்களிலும் கிறிஸ்தவ ஆலயங்கள் எழும்பின. எதிர்ப்புகள் மறைந்தன. இந்த காலகட்டத்தில் திருவனந்தபுரத்திலுள்ள வலியத்துறை என்ற இடத்தில் ஒரு பெரிய ஆலயத்தைக் கட்டி எழுப்பினார். அது இன்று அவருடைய பெயரால் ரிங்கல் டௌபே நினைவாலயம் என்று அழைக்கப்படுகிறது. அந்த வட்டாரத்தில் அதுவே புராட்டஸ்டன்ட் சபையின் முதல் தென்னிந்திய திருச்சபையின் ஆலயமாகும்.

கிறிஸ்தவமும், கல்வியும் நாணயத்தின் இருபக்கங்கள் போன்றதாகும். மிஷனெரி ரிங்கல் டௌபேயின் பெரும் முயற்சியால் ஆலயத்தின் அருகிலேயே பள்ளிக்கூடங்கள் கட்ட ஆரம்பித்தனர். ஆலயத்தில் உபதேசியார்களாக பணியாற்றியவர்கள் பள்ளியில் ஆசிரியராகவும் பணியாற்றினார்கள். கிறிஸ்தவர்கள் மீது திருவாங்கூர் அரசின் அணுகுமுறை அனுகூலமாக மாறியதால், முன்புபோல் தாழ்த்தப்பட்டோர் ஒடுக்கப்பட்ட நிலைமைகள் மாறின. மிஷனெரிகளின் தலையீட்டால் மெய் தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவை அறிந்து கொண்டது மாத்திரமல்ல, அடிமை வாழ்விலிருந்து விடுதலையைப் பெற்றுக் கொண்டனர். அநேகருடைய உயிர்த்தியாகத்தினாலும், அம்மண்ணில் இரத்தம் சிந்தியதாலும் கிறிஸ்தவம் வளர்ந்தது. தாங்கள் அறிந்த இயேசு கிறிஸ்துவுக்காக அப்பகுதி மக்கள் தங்கள் சொந்த இரத்தத்தை விலைக்கிரயமாக செலுத்தியதை தேவன் கனப்படுத்தினார். அவர்களுக்கு இளைப்பாறுதலின் காலத்தைக் கட்டளையிட்டார். இரத்த சாட்சிகள் புதைக்கப்படுவதில்லை. அவர்கள் விதைக்கப்படுகிறார்கள் என்பது எவ்வளவு உண்மை. 1816-ஆம் ஆண்டு பிப்ரவரி 5-இல் அவரது தாய்நாட்டிற்குத் திரும்பினார். கன்னியாகுமரி மாவட்ட மக்கள் இன்றும் அவரை நினைவு கூறுகிறார்கள்.

நன்றி : "A Forgotton History" -
JOY GNANADAS & INTERNET SOURCES

("தென் தமிழகத்தில் கிறிஸ்தவ மிஷனெரிகள்"

# சென்னையில் IBT-இன் சிறப்புக் கூடுகை

மே மாதம் 1 ஆம் தேதி மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை, சென்னையிலுள்ள The Salvation Army Social Service Centre, No. 8, Vepery High Road, Periyanna Mastery Street, Periamet, Chennai - 600 003-இல் IBT–இன் சிறப்புக் கூடுகை நடைபெறும். சென்னையிலுள்ளவர்கள் இக்கூடுகையில் பங்கு பெற்று IBT ஊழியத்தைக் குறித்து அறியவும், நல்ல தேவசெய்தி, மிஷனெரி குறுநாடகம் மற்றும் பாடல்களைக் கேட்டு பயன்பெறவும் கேட்டுக்கொள்கிறோம். இரவு உணவு வழங்கப்படும்.

தொடர்புக்கு : *திரு. பிரபு,* IBT பிரதிநிதி, சென்னை. *செல் : 91768 85019*

---

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

1. **STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

2. **INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI
BHARAT INTERFACE FOR MONEY | UNIFIED PAYMENTS INTERFACE

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

---

# கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 4. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 5. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 6. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 7. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 8. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 9. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 10. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 11. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 12. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 13. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 14. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 15. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

# துதியுங்கள்! ஜெபியுங்கள்!!

1. முண்டாரி மற்றும் போவி மொழிகளில் வெளியிடப்பட்ட புதிய ஏற்பாடு புத்தகங்கள், 800–க்கும் மேலே அம்மொழி பேசும் மக்களுக்கு மொழிபெயர்ப்பாளர்கள் சகோ. சந்திரகாந்தா பர்லா மற்றும் சகோதரி. லதா மூலமாக விநியோகம் செய்யப்பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். வாங்கிய மக்கள் அனுதினமும் படித்து தியானம் செய்து கர்த்தருக்குள் வளர ஜெபியுங்கள்.

2. இவ்வருடத்தின் பிப்ரவரி மாதத்திலும் (IInd Batch of Translators) பல மாநிலங்களில் இருந்து கோவை IBT மையத்திற்கு வந்து, தங்கள் மொழிபெயர்ப்புச் சார்ந்த பணிகளை மேற்கொள்ளவும், அவர்களின் வழிப்பயணத்தில் பாதுகாப்பை அளித்த தேவனுக்கு துதிகளை ஏறெடுங்கள். இந்த மொழிபெயர்ப்பாளர்கள் தங்கள் பணித்தளங்களிலும் இங்கு பணி செய்வதை போன்று, துரிதமாகவும் குறைவின்றி செய்யவும் ஜெபியுங்கள்.

3. IBTபணித்தளங்களில் உள்ள மிஷனெரிகள் அலுவலகத்தின் அறிவுரைப்படி, IBT மூலமாக வெளியிடப்பட்டு விநியோகம் செய்யப்பட்ட வேதாகமப் புத்தகங்களை, அவரவர்கள் அனுதினமும் பயன்படுத்தவும், கொடுக்கப்பட்ட நபர்களைச் சந்தித்து முறையாக வாசித்து பயன்படுத்துகிறார்களா என்று அவர்களிடம் நேரில் விசாரிக்கவும், வாசிக்கத் தெரியாத மக்களை கண்டறிந்து, அவர்களுக்கு எழுத்தறிவுப் பணியை திட்டமிட்டு செயல்படுத்தவும், இதன் மூலமாக கல்விக் கற்காத மக்களும் வேத புத்தகங்களை வாசிக்கும் திறன் பெற, மிஷனெரிகள் / மொழிபெயர்ப்பாளர்கள் உதவிக்கரமாக இருக்க ஜெபியுங்கள்.

4. அந்தந்த மொழி பேசும் மக்களில் ஓரளவு படித்த வாஞ்சையுள்ள வாலிபர்களை, மிஷனெரிகள் கண்டறிந்து, அவர்களையும் எழுத்தறிவுப் பணிகளில் இணைத்து, இப்பணியைத் துரிதப்படுத்த ஜெபியுங்கள்.

5. கோண்டா பொர்ஜா மொழியில் உள்ள புதிய ஏற்பாடு மற்றும் கடபா மொழியிலுள்ள புதிய ஏற்பாடு பேஜ் செட்டிங் செய்யப்பட்டு, பிரிண்டிங்கிற்கு இரு மொழிபெயர்ப்பாளர்களுக்கும் அனுப்பப்பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இவைகள், தாமதமின்றி சரிபார்ப்புச் செய்து, பிரஸ்ஸிற்கு அனுப்ப ஜெபியுங்கள்.

6. சட்டிஸ்கர் மாநிலத்திலும் கிறிஸ்தவ மிஷனெரிகளுக்கு உபத்திரவம் கொடுக்கப்பட்டு, சிலரை சிறைச்சாலையில் அடைத்துள்ளதாக அறிய முடிகிறது. இதன் மத்தியிலும் நற்செய்திப் பணி தொடரவும், தொல்லை கொடுப்பவர்கள் கர்த்தரால் தொடப்படவும் ஜெபியுங்கள்.

## SEND ALL YOUR CONTRIBUTIONS


**Cheques / DD / M.O. to**
**INDIAN BIBLE TRANSLATORS**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**


## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/–

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


| | |
|---|---|
| Editor & Published by<br>On behalf of | **Mr. K. JAISINGH**<br>**WORD PUBLISHERS TRUST**<br>14, Ashok Layout,<br>Civil Aerodrome Road,<br>Coimbatore - 641 014. |
| Printed by | **Mr. C.K. VENKATESH**<br>Chandra Prabha Press<br>113-118, V.H. Road, CBE-1. |


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/–ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code**-ஐ **SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

A/c. No. : 1630413107
Name : Word Publishers Trust
Branch : Kalapatti
IFS Code : CBIN0282057

**SCAN & PAY**

Address :
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd April 2025
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**